விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 359 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 27 சனிக்கிழமை (13.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

## யாழில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்து மீறலைக் கண்டித்து யாழில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

(04ஆம் பக்கம் பார்க்க)

### அனலைதீவில்
## கிணற்றினுள் தவறி வீழ்ந்த பெண் மரணம்



15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மழை தொடரும்

(கொழும்பு)

வடக்கில் மழையுடனான காலநிலை தொடரும் என வளிமண்டலவியல்

15ஆம் பக்கம் பார்க்க

## அத்துமீறும் இந்திய மீனவர்களுக்கு எதிராக விரைவில் நிரந்தர முடிவு

### கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபடும் இந்திய கடற்றொழிலாளர்கள் தொடர்பாக விரைவில் நிரந்தர முடிவு எடுக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அலுவலகத்திற்கு

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தலையீடு

### யாழில் 18 வீடுகளுக்கு ரூ.25 ஆயிரம் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டையடுத்து வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டைச் சுத்தப்படுத்துவதற்கான 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுக்கு 18 வீடுகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

நவாலி கிழக்கு கிராம

15ஆம் பக்கம் பார்க்க

## பயணம், சுற்றுலாக்களை தவிர்க்குமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடுமையான வானிலை காரணமாக ஆபத்தான நிலை நீடிப்பதால் பொதுமக்கள் பயணங்கள் மற்றும் சுற்றுலாக்களைத் தவிர்க்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர எச்சரித்துள்ளார்.

நான்கு மாவட்டங்களில் உள்ள 33 பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாயத்திற்கான சிவப்பு அறிவிப்புகள் மேலும் நீட்டிக்கப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

## அவசரகாலச்சட்டம் தவறான நோக்கில் பயன்படுத்தப்படவில்லை

### பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் தவறான நோக்கில் பயன்படுத்தப்படவில்லை எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02ஆம் பக்கம் பார்க்க

## சிறிய அளவிலான மழையும் பாரிய சேதத்தை ஏற்படுத்தும்

### அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிய அளவிலான மழையும் பாரிய சேதங்களை ஏற்படுத்தும். எனவே அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

அதிதீவிர வானிலை

04ஆம் பக்கம் பார்க்க

### முல்லையில் விபத்து
## குடும்பஸ்தர் உயிரிழப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்களின் அத்துமீறலில் கவனம் செலுத்துக

### யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் ரவிகரன் எம்.பி வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து கூடிய கவனஞ்செலுத்துமாறு யாழ். மாவட்ட அரச அதிபரிடம் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன்

02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அவசரகால ...

அவர் மேலும் தெரிவிக்கையில், பேரிடர் நிலைமையை எதிர்கொள்ளவே அவசர காலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது. மாறாக அரசியல் நோக்கங்களுக்காக சட்டம் பயன்படுத்தப்படவில்லை.

எனினும் அவசரகாலச் சட்டம் ஒடுக்குமுறை ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது என எதிரணி குற்றம் சாட்டி வருகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது இக்குற்றச்சாட்டை நிராகரித்திருந்தார்.

அதேவேளை அவசரகாலச் சட்டத்தின் கீழ் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக எவரேனும் கருதினால் அது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யலாம் என்றார்.

(ம-7)

## இந்திய ...

வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கிடையில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலுக்கு எதிராக மீனவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியினையடுத்து இடம்பெற்ற இச்சந்திப்பில், இந்திய இழுவைப்படகுகளின் அடாவடிச் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் யாழ்ப்பாணம் உட்பட வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இந்தப் பிரச்சினை தொடர்பில் உரிய கவனம் செலுத்துமாறு மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபனிடம் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார். (ம-7,33)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகர் ஆவரங்காலில் இயங்கிவரும் அவிக்னா மோட்டார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண் /பெண் இருபாலாரும்.

● சேவிஸ் போடுபவர் (2W, 3W service boys)

வயது எல்லை : 20 – 35

தொடர்புகொள்ள வேண்டிய நேரம் : காலை 9.00 – மாலை 5.30 மணிவரை

**அவிக்னா மோட்டார்**

பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்தி, யாழ்ப்பாணம். 0771748242

(C-4555)

## வேலையாள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள தேனீர் கடை ஒன்றிற்கு உணவு பரிமாற்றத்துக்கு வேலை ஆள் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு

**077 390 3126**

(C-4559)


## வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

யாழ்.சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 64 வது வருடாந்த பொதுக் கூட்டம் 14.12.2025ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாதியர் பயிற்சிக்கல்லூரி யாழ். போதனா வைத்தியசாலையில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்பதனையும் சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி திரு.அ.அருள்ராஜ்
செயலாளர்

(6149)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்**



தோற்றம் 25.09.1928
மறைவு 07.12.2012

திதி : 13.12.2025

ஆண்டு பதின்மூன்று ஓடி மறைந்தாலும்
மறைந்து போன உங்கள் நினைவு
மனதைவிட்டு அகலவில்லை
தண்ணிழலில் எம்மைத் துயரில் மூழ்க வைத்து
விண்ணுலகம் தேடிச் சென்றது ஏன் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

"தண்ணிழல்"
21/5, 1ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(1797)

நீங்கா நினைவில்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 01 - 1940
இறப்பு 11 - 12 - 2025



### திருமதி நடராசா நாகேஸ்வரி

(ஓய்வு நிலை ஆசிரியை – புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலை)

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.28, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா நாகேஸ்வரி அவர்கள் கடந்த (11.12.2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் இளைப்பாறிய லிகிதர் நாகலிங்கம் நடராசா அவர்களின் பாசமிகு துணைவியாரும் திருவருள், தமயந்தி, தனஞ்சயன், நிமலராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீபா, ஸ்ரீஸ்கந்தகுமார், சாளினி, சித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சண்முகபூபதி அவர்களின் பாசமிகு சகோதரியும் சந்திரிக்கா, பகீரதன் ஆகியோரின் பெரியம்மாவும் அஸ்விகா, அஸ்வின், சுவாதி, தாரணி, அக்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான காமாட்சி (ஆசிரியை), உலகேஸ்வரி, திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: கணவர், மக்கள், மருமக்கள்

கணவர் - 077 175 0084

(5296)

## மரண அறிவித்தல்

மண்ணில் 12 - 11 - 1937
விண்ணில் 12 - 12 - 2025



### ஐயாத்துரை இராமசாமி

(ஓய்வு பெற்ற ஆசிரியர் – யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை)

யாழ்.புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் இணுவில் தெற்கு, அளவோடை வீதியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராமசாமி அவர்கள் நேற்று (12.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கனகசபை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் மல்லிகாதேவி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும் உதயகுமார் (கனடா), சிவகுமார் (அமெரிக்கா), சிவதர்சினி (ஆசிரியர் - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவாஜினி (கனடா), தனுஷா (அமெரிக்கா), சுதாகரன் (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரிஷா, பிரஜித், சங்கவி, அஸ்வந் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நவரத்தினம், சந்திரதேவன் மற்றும் இராசராணி, தருமதுரை, சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அளவோடை வீதி, இணுவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அளவோடை வீதி, இணுவில் தெற்கு.

தர்சினி (மகள்) - 076 054 2707
சுதாகரன் (மருமகன்) - 077 408 4332

தகவல்: குடும்பத்தினர்


(6150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற வானிலை
# உயிரிழந்தோர் எண்ணிக்கை
# 639 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

**நாட்டில் நிலவிய சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 639 ஆக அதிகரித்துள்ளது.**



கண்டி மாவட்டத்திலேயே அதிகளவான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கண்டி மாவட்டத்தில் 234 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து, பதுளை மாவட்டத்தில் 90 பேரும் நுவரெலியாவில் 89 பேரும் குருநாகலில் 61 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 37 பேரும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கேகாலை மாவட்டத்தில் 32 பேரும் மாத்தளையில் 28 பேரும் கம்பஹாவில் 17 பேரும் அநுராதபுரத்தில் 13 பேரும் கொழும்பில் 9 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 8 பேரும் அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 4 பேரும் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா 3 பேரும், முல்லைத்தீவு மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் தலா இருவரும் இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, காலி மாவட்டங்களில் தலா ஒருவரும் சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி)

## மேல் மாகாணத்தில் மட்டும் 40,000 மெற்றிக் தொன் குப்பைகள்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் நிலைமையைத் தொடர்ந்து, மேல் மாகாணத்தில் மட்டும் சுமார் 40,000 மெற்றிக் தொன் குப்பைகள் குவிந்துள்ளன.

கொடிகாவத்தை, முல்லேரியா, கொலன்னாவை மற்றும் கடுவெல ஆகிய உள்ளூராட்சிப் பிரதேசங்களில் அதிக அளவு குப்பைகள் குவிந்துள்ளதாக மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபையின் தலைவர் சதுரு கஹந்தவ ஆராச்சி தெரிவித்தார்.

இருப்பினும் இன்னும் சிறிய அளவிலான குப்பைகள் அகற்றப்பட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் பேரிடரால் அதிகம் பாதிக்கப்பட்ட கம்பளை நகரில், 400 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான குப்பைகள் குவிந்துள்ளதாகத் தெரிவித்தார்.

கம்பளை, நிதஹஸ் மாவத்தையில் குப்பைகள் குவிந்துள்ளதால் அந்தப் பகுதி முழுவதும் கடுமையான துர்நாற்றம் வீசுவதாகவும், மக்களின் சுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி)

## மீண்டும் நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்கள்

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் பல ஆற்றுப்படுக்கைகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்துள்ள தாக நீர்ப்பாசனப் பணிப்பாளர் எல்.எஸ். சூரிய பண்டார நேற்றுக் காலை தெரிவித்தார்.

குறிப்பாக கிங் கங்கை, களு கங்கை, களனி கங்கை மற்றும் யான் ஓயா படுக்கைகளின் மேல் பகுதிகளுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தின் சில இடங்களுக்கும் 50 மி.மீற்றரை அண்மித்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக சில ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிப்பைக் காட்டினாலும், அது வெள்ள மட்டம் வரை உயரவில்லை என தெரிவித்தார்.

அத்துடன், நீர்த் தேக்கங்களின் நீர்மட்டத்தைக் கருத்தில் கொள்ளும்போது சுமார் 34 பிரதான நீர்த்தேக்கங்கள் தொடர்ந்தும் வான் பாய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

முக்கியமாக தெதுரு ஓயா, இராஜாங்கனை, நாச்சதூவ, யான் ஓயா, பதவிய, லுனுகம் வெஹெர மற்றும் சேனநாயக்க சமுத்திரம் ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர்மட்டம் குறைக்கப்படுவதாகவும் நீர்ப்பாசனப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (நி)

## மதுபான உரிமக் கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

அனைத்து மதுபான உரிமக் கட்டணங்களும் 100 சத வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் வருடாந்திர கலால் வரி, பாதுகாப்பு வைப்புத் தொகை மற்றும் தொழில்துறை அனுமதிக்கான ஒரு முறைக் கட்டணம் ஆகியவை அதற்கேற்ப அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## 16 ஆம் திகதி முதல்
# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச் சத்துக் கொடுப்பனவு

(கொழும்பு)

தற்போது நிலவும் அனர்த்த நிலைமை மற்றும் வரவிருக்கும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 5,000/- பெறுமதியான ஊட்டச்சத்து கொடுப்பனவை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப்பனவு ஒரு முறை மாத்திரமே வழங்கப்படும். இது 2025 நவம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தாய் சேய் நல நிலையங்களில் பதிவு செய்த கர்ப்பிணித் தாய் மார்களுக்குக் கொடுக்கப்படும்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் உள்ள முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் ஒரு திட்டமாக, இந்தக் கொடுப்பனவு டிசம்பர் 16 ஆம் திகதி முதல் பிரதேச செயலகங்களூடாக மேற்கொள்ளப்படும். (நி)

# 12 ஆண்டுகளின் பின் மரண தண்டனை!
## நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

(கொழும்பு)

நுவரெலியா கந்தபளை பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றவாளிகாக அடையாளம் காணப்பட்ட ஒருவருக்கு நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

2013 ஆம் ஆண்டு நுவரெலியா கந்தபளை பகுதியில் சிவலிங்கம் ஞானசேகரன் என்பவர் தனது மனைவி சுப்பையா மனோரஞ்சனியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் 12, ஆண்டுகளாக விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால், குற்றவாளி எனக் கண்டறியப்பட்டு சிவலிங்கம் ஞானசேகரன் என்ற நபருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. (நி)

## மகாவலி அபிவிருத்தித் திட்டம்;
# இலங்கைக்கு 200 மில்லியன் கடன்
# ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கையின் மிகப்பெரிய பல்பயன்பாட்டு நீர்வள மேம்பாட்டு முயற்சியான மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆதரிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் டொலர் கடனை அங்கீகரித்துள்ளது.

மகாவலி ஆற்றிலிருந்து அதிகபடியான நீரை இலங்கையின் வறண்ட வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளுக்கு மாற்றுவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், விவசாயத் துறையின் மீள்தன்மையை வலுப்படுத்துவதன் மூலமும், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலமும் வடமத்திய மாகாணத்தில் 35,600 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும்.

இந்தத் திட்டத்திற்கான கூட்டு இணை நிதியளிப்பு முயற்சியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழிநடத்துகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியாவிற்கு எதிரான ரி-20 தொடரை சமப்படுத்திய தென்னாபிரிக்கா!

**இந்திய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக் கிடையிலான இரண்டாவது ரி-20 கிரிக்கெட் போட்டி யில் தென்னாபிரிக்கா 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 1-1 என சமப் படுத்தியது.**



இந்தியா, தென்னாபிரிக்கா இடை யிலான 2 ஆவது ரி-20 பஞ்சாப்பின் சண்டிகரில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற இந்தியா பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்கா நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 213 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியின் டி காக் 90 ஓட்டங்கள் குவித்தார். டெனோவன் பெரைரா 30 ஓட்டங்களும், மார்க் ரம் 29 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்தியா சார்பில் வருண் சக்கர வர்த்தி 2 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 214 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு டன் இந்தியா களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அபிஷேக் சர்மா 17 ஓட்டங்களிலும், சூர்யகுமார் 5 ஓட்டங்களிலும், அக்சர் படேல் 21 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்த னர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந் தாலும் திலக் வர்மா தனியாக போராடினார். அவர் அரை சதம் கடந் தார்.

இறுதியில், இந்திய அணி 19.1 ஓவரில் 162 ஓட்டங்களை மாத்தி ரமே பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 51 ஓட்டங்கள் வித்தியாசத் தில் தென் னாபிரிக்கா வெற்றி பெற் றது. இதன்மூலம் ரி-20 தொடர் 1-1 என சமனிலையில் உள்ளது. (3)

# மரண அறிவித்தல்

## திருமதி யோகம்மா செல்வரட்ணம் (இரத்தினம் ரீச்சர்)

(இளைப்பாறிய ஆசிரியை – பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரி, நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை, சுப்பிரமணிய வித்தியாசாலை, றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, மானிப்பாய் St Anne's School)



பிறப்பு 24.07.1934 இறப்பு 04.12.2025

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஆனைக் கோட்டை, மானிப்பாய், பிரித்தானியா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட யோகம்மா செல்வரட்ணம் அவர்கள் கடந்த (04.12.2025) வியாழக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர் களான கணபதிப்பிள்ளை உடையார் - தங்கம் உடைச்சி தம்பதிகள், மயில்வாகனம் (மயிலர் கடை) - சின்னத் தங்கம் தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும் கந்தசாமி (எழுதுவினைஞர்) - அமிர்தவள்ளி தம்பதிகளின் அன்பு மகளும் நாகேந்திரர் (கொடிவேல் விதானையார்) - செல்லம்மா (இலங்கையின் முதல் பெண் கிராமசபைத் தலைவி) தம்பதிகளின் அன்பு மருமகளும்காலஞ்சென்ற செல்வரட்ணம் (அரசாங்க எழுதுவினைஞர் கச்சேரி, Land Registry Colombo, Mannar & Mullaitivu) அவர்களின் ஆசை மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் Dr.சந்திரபால் (Rtd. Consultant Surgeon,ENT) ஆகியோரின் அன்புச் சகோதரியும் எஸ்தர் சாவித்திரி, நடராஜா (விதானையார்) ஆகியோரின் அன்பு மச்சாளும் சுபாசினி (Executive officer - Home office London), சுபோதினி (பபி - Scientist- NewZealand), சுரேசினி (சூட்டி - Accountant London) காலஞ்சென்ற சுரேஸ்(உரிமையாளர் AVM Money Express Exchange Ltd London) ஆகியோரின் பாசமிகு அம்மாவும் மதனா (France), வேதா (London), யோகா(Canada), வதனி (Canada) ஆகியோரின் பாசமிகு அன்ரியும் சித்திரா, சுபத்திரா, ஹரித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியும் சிவோண், சரண், சிரோமி, ஜெரோமி, செகான், ராகுலன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆதவன், சுருதிகா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் அன்ரன் சுரேஸ், ஜூட், நவநீதன், சுகந்தி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (விதானையார்), அமிர்தரட்ணராஜா (அதிபர்), இராமநாதன் (பொறியியலாளர்), ராஜேஸ்வரி (ஆசிரியை), இராமச் சந்திரன் (உதவி அரசாங்க அதிபர்), இலட்சுமணராஜா (புதைபொருள் ஆராய்ச்சி யாளர்) மற்றும் நவயோகம் (இளைப்பாறிய ஆசிரியை), நாகேஸ்வரி(இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மச்சாளும் காலஞ்சென்றவர்களான சற்குணம் (ஆசிரியர்), அமிர்தம் (தாதியர்) மற்றும் அன்னலட்சுமி (கனடா), காலஞ்சென்ற வர்களான ஞானாம்பிகை, கந்தையா (விதானையார்), சுவாமிநாதன்(J.P), நாகபூசணி, கௌரி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (13.12.2025) சனிக்கிழமை நண்பகல் 12.00 - பிற் பகல் 2.00 மணிவரை angel funeral of sury ltd 1103 London Rd, thornton Health Crr7, UK இல் வைக்கப்பட்டு நாளை (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 - 10.30 மணியளவில் Eternity Halls 374 Brigstock Rd, Thornton Health CR 7 7JF, United Kingdom இல் கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் 11.00 - 12.00 மணியளவில் South London Crematorium Rowan Rd, London SW 16 5JG, United Kingdom இல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Dr. சந்திரபால் - +44 79 3061 5646
சுபாசினி - + 44 77 47 54 82 29
சுபோதினி - +64 27 21 25 404
சுரேசினி - +44 74 55 16 4206

(6153) தகவல் குடும்பத்தினர்

# இன்றுடன் ஓய்வு பெறும் மல்யுத்த வீரர் ஜோன் சீனா



உலக மல்யுத்த போட்டியில் இருந்து ஜோன் சீனா ஓய்வு பெறுவதாக அறி விக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை நடைபெறும் குந்தர் இற்கு எதிரான போட்டியுட னேயே அவர் ஓய்வு பெறுகிறார்.

ஹொலிவுட்டில் நடித்து வரும் ஜோன் சீனா, உலக மல்யுத்த போட்டியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் நடிப்புடன் சேர்ந்து ஐந்து வருடத்துக்கு உலக மல்யுத்த நிறுவனத்தின் தூதராகவும் செயல்பட ஒப்பந்தமாகி யுள்ளமை குறிப்பிடத்தக் கது. (3)

## சிறிய அள...

காரணமாக நிலம் ஏற்கனவே பாதிக் கப்பட்டுள்ளதுடன், நாட்டின் நீர்த்தேக் கங்கள் மற்றும் ஆறுகள் ஏற்கெனவே முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலை யில் காணப்படுவதாக அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

இதன் காரணமாக, மிகச் சிறிய அளவிலான மேலதிக மழைவீழ்ச்சி யும் கூட பாரிய சேதங்களை ஏற்படுத் தக்கூடும் என அனர்த்த முகாமைத் துவ நிலையம் எச்சரித்துள்ளது.

எனவே, மக்கள் மிகுந்த அவதானத் துடன் இருக்குமாறு அந்நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## இந்திய மீனவர்...

பண்ணைப் பகுதியில் உள்ள கடற் றொழில் நீரியல் வளத் துறை திணைக் களை அலுவலகத்தின் முன்னால் நேற் றுக்காலை ஒன்றுகூடிய யாழ். மாவட்ட மீனவர்கள், இந்திய மீனவர்க ளின் அத்துமீறலுக்கு எதிராகக் கோஷ மிட்டவாறு அங்கிருந்து பேரணியாக மாவட்ட செயலகம் வரை சென்றடைந்த னர்.

இதன்போது யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக் கப்பட்டது.

அத்தோடு இந்தியத் துணைத் தூத ரகம், வடக்கு மாகாண ஆளுநர், கடற் றொழில் நீரியல் வளத்துறை திணைக் களம் ஆகியவற்றிலும் போராட்டக் காரர்களால் மகஜர் கையளிக்கப்பட் டது.

நீண்டகாலமாக இந்திய மீனவர்கள் வடக்குக் கடற்பரப்பக்குள் அத்துமீறி நுழைந்து இழுவைப்படகு மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் கடல் வளங்கள் சூறை யாடப்பட்டு வருவதாகவும் தமது வாழ் வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தெரி வித்தே மீனவர்கள் போராட்டத்தில் ஈடு பட்டனர். (ம-7,33,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச உரம் வழங்கலில் இறுக்கமான நடைமுறைகள்

## பாதிக்கப்படும் விவசாயிகள்

(சாவகச்சேரி)

**கமநல சேவைகள் நிலையங்களில் இலவசமாக வழங்கப்படுகின்ற நெற் செய்கையாளர்களுக்கான இலவச ஓ.எம்.பி உரம் வழங்கும் நடைமுறையில் உள்ள சில இறுக்கமான நடைமுறைகள் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பாக சிரமங்களை எதிர்நோக்கும் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக வயது முதிர்ந்த விவசாயிகள், பெண்கள், உத்தியோகத்தர்கள் தமது பிள்ளைகளை/நெருங்கிய உறவுகளை உரிய ஆவணங்களுடன் (தேசிய அடையாள அட்டை, ஏக்கர் வரிச் சிட்டை மற்றும் சந்தாப் பணச் சிட்டை) ஆகியன சகிதம் இலவச உரத்தினைப் பெற அனுப்பும் போது அங்கேயுள்ள சில உத்தியோகத்தர்களினால் வயலுக்கு உரித்தானவர் வருகை தராமல் உரம் வழங்க முடியாது என்ற இறுக்கமான நடைமுறை பின்பற்றப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றது.

இதனால் வயது முதிர்ந்த விவசாயிகள், பெண்கள், உத்தியோகத்தர்களான நெற் செய்கையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மிகக் குறைந்தளவான இலவச உரத்திற்கு கூட நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது

இந்த இறுக்கமான நடைமுறை கைதடி கமநல சேவை நிலையத்தில் காணப்படுகின்றது.

தனங்கிளப்பு,மறவன் புலோ பகுதிகளில் நெல் வயல்கள் உள்ள விவசாயிகள் கைதடி கமநல சேவை நிலையத்தினை நாடும் போது இந்தச் சிக்கலை எதிர்கொள்கின்றார்கள்.

முதியவர்கள், பெண்கள், உத்தியோகத்தர்கள் வயலுக்கு உரித்தானவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் தமது நெருங்கிய இரத்த உறவினர்களை உரிய ஆவணங்களுடன் அனுப்பும் போது கூட, அவர்களுக்கு உரம் வழங்காத சூழ்நிலை காணப்படுகின்றது.

பிள்ளைகளை அனுப்பிய சந்தர்ப்பங்களில் கூட அவர்களைத் திருப்பி அனுப்பிய நிலை காணப்படுகின்றது.

பரப்பிற்கு 400 கிராம் என்ற அடிப்படையில் மேற்படி இலவச உரம் வழங்கப்படுகின்றது. சிலர் 10 பரப்பு வயலுக்கு நேரம் செலவழித்து அங்கு செல்லும்போது இவ்வாறு திருப்பி அனுப்பப்படுவதால் விவசாயிகள் அதிருப்தி அடைகின்றனர்.

எனவே, இந்த நடைமுறையில் தளர்வினை ஏற்படுத்தி, உரிய ஆவணங்களுடன் செல்லும்போது அவர்களுக்கான இலவச உரத்தினை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (நி-8-30)

# ஜோர்ஜியாவில் சாதனை படைத்த மானிப்பாய் UCMAS மாணவர்கள்









(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய நாடான ஜோர்ஜியாவில் நடைபெற்ற UCMAS சர்வதேச மட்ட போட்டியில் இலங்கையில் இருந்து 58 மாணவர்கள் பங்குபற்றி பல வெற்றிக்கிண்ணங்களை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இக்குழுவில் இலங்கைக்கு ஒரு கிராண்ட் சம்பியன், 5 சம்பியன் உட்பட மேலும் பல முதலாமிடம், இரண்டாமிடம் போன்ற வெற்றிக் கேடயங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் UCMAS சர்வதேச மட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளது.

இதில் மானிப்பாய் UCMAS நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களான விக்னேஸ்வரன் ருஷாந் UCMAS சர்வதேச மட்ட அணியில் வெள்ளிப்பதக் கத்தையும் 'Z' பிரிவில் யூட்சுவேன் அயூரி சம்பியன் கிண்ணத்தையும் தட்டிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக் கது.

அத்துடன் விஜேந்திரன் சங்கீத், சுஜிந்தன் கபிஷன் ஆகியோர் இரண்டாம் இடத்துக்கான கிண்ணத்தையும் விக்னேஸ்வரன் ருஷாந், கமலதாசன் ஜனானி, செந்தில் ரூபன் உமேசன், கமலதாசன் புவிசன் ஆகியோர் மூன்றாமிடத்துக் கான கிண்ணத்தையும் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மானிப்பாய் UCMAS நிறுவனத்தின் நிர்வாகி தவரூபன் மதிவதனி அவர்களின் வழிகாட்டலின் கீழ் இப்போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டியுள்ளனர். (3)

31 ஆம் நாள்

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 1935 - 05 - 04



மறைவு 2025 - 11 - 14

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் தன் வாழ்வின் முற்பகுதியை தின்பனை கோப்பாய் வடக்கையும் பிற்பாதியை கனடா Ontario வையும் தனது வதிவிடமாகவும் கொண்ட

### இளையதம்பி பரமேஸ்வரி அவர்கள்

எங்கள் அன்புக்குரியவரின் இழப்பின்போது ஆறாத்துயரில் எமக்கு சகல வழிகளிலும் ஆறுதலும் கூறி உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவர்களின் அந்தியேட்டி கிரியைக்கான 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 12.00 மணிக்கு நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(1784)

தின்பனை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய் 077 503 4743

தகவல் குடும்பத்தினர்

# சங்கானை இந்து இளைஞர் மன்றம் உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரைநகர், மன்னார், கிளிநொச்சி பகுதியில் உள்ள மக்களுக்கு சங்கானை இந்து இளைஞர் மன்றத்தினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. (8-33)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் தமிழ் பாட ஆசிரியராகக் கடமையாற்றும் செல்வி. **யசோதரா குமாரவேல்** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி.

### மனோன்மணி குமாரவேல்

அவர்கள் 11.12.2025 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



பிறப்பு-21.04.1938

இறப்பு -11.12.2025

(1785)

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விவசாயம் செய்யும் போது
# இரசாயன உரத்துடன் சேதனப் பசளைகளையும் கலந்து பயன்படுத்துங்கள் - ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

**அதிக விளைச்சலுக்கு ஆசைப்பட்டு நாம் மண்ணில் கொட்டிய இரசாயன உரங்கள் இன்று அந்த மண்ணை மட்டும் அல்ல நம்மையும் நோயாளிகளாக்கியுள்ளன என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற உலக மண் தின நிகழ்வு மற்றும் "அறுவடை" சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், ஒரு காலத்தில் அநுராதபுரம், பொலனறுவையில் மட்டுமே அதிகம் காணப்பட்ட சிறுநீரக நோய், இன்று முல்லைத்தீவு, வவுனியா வரை பரவியுள்ளது. இது எமக்கு விடுக்கப்பட்ட மிகத் தெளிவான எச்சரிக்கை மணி. யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற சின்ன வெங்காய விளைச்சல் சில பகுதிகளில் குறைந்து போனதற்கு, மண் தன் வளத்தை இழந்து மலடாகிவிட்டதே காரணம்.

விவசாயிகள் பழைய முறைகளுக்குத் திரும்ப வேண்டியதில்லை. ஆனால் புத்திசாலித்தனமான மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும். மண்ணைப் பரிசோதித்து, என்ன சத்து தேவையோ அதை மட்டும் இடுங்கள். இது செலவைக் குறைக்கும், மண்ணைக் காக்கும். இரசாயன உரத்துடன் தொழுவுரம், மண்புழு உரம் போன்ற சேதனப் பசளைகளையும் கலந்து பயன்படுத்துங்கள். ஒரே பயிரைத் தொடர்ந்து செய்யாமல், பயறு, உழுந்து போன்ற மண்ணுக்குச் சத்துத் தரும் பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள். தொழில்நுட்பம் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் பயிருக்குத் தேவையானதை மட்டும் துல்லியமாக வழங்குங்கள். இது விளைச்சலை இருமடங்காகப் பெருக்கும்.



மேலும் நாட்டில் ஏற்பட்ட டித்வா புயல் மற்றும் வெள்ளப் பெருக்கினால் நீங்கள் ஆசையாக வளர்த்த பயிர்களையும் பிள்ளைகள் போல் வளர்த்த கால்நடைகளையும் பறிகொடுத்துவிட்டுப் பலர் நிர்க்கதியாய் நிற்கிறீர்கள். ஆனால், நான் உறுதியாகக் கூறுகிறேன், நீங்கள் தனித்து விடப்படவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு உங்கள் துயரை முழுமையாக உணர்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய இழப்பீடுகளும் வாழ்வாதார உதவிகளும் மிக விரைவில் உங்களை வந்து சேரும் என்றார். (8)

# சென்.ஜோன் அம்புலன்ஸினரால் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல்


(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டு தென்மராட்சி நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள 100 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய சுகாதார பொருட்கள் அடங்கிய பொதிகள் யாழ். மாவட்ட சென்.ஜோன் அம்புலன்ஸினரால் வழங்கப்பட்டது.

இந் நடவடிக்கையானது சென்.ஜோன் அம்புலன்ஸ் ஸ்ரீலங்கா தலைமையகத்தினருடனான ஆலோசனைக்கு இணங்க அந் நிறுவனத்தின் யாழ் மாவட்ட ஆணையாளர் "எட்வார்ட் டில்ஷான்" இன் பணிப்பின் பிரகாரம் உதவி மாவட்ட ஆணையாளர் ஈழநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதற்கான முன்னெடுப்புக்கள் தென்மராட்சி பிரதேசத்திற்கு பொறுப்பான சென். ஜோன் அம்புலன்ஸின் பிரிவு உத்தியோகத்தர் பிரகீத்தினால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிட்டதக்கது. (8)

# கரவெட்டியில் கால்நடை மருத்துவ சேவை



(நெளுக்குளம்)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு உதவும் விதமாக கரவெட்டி அரச கால்நடை வைத்திய அலுவலகத்தினால் இலவச கால்நடை வைத்திய சேவை ஒன்று வைத்திய அதிகாரி எஸ்.சுகிர்தன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கரவெட்டி தல்லை அம்பாள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு இடர்கால பண்ணை முகாமைத்துவம், நோய்த்தடுப்பு ஆலோசனைகள், இலவச மருந்துப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. இதில் 50 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பயன்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

# அறிவுத்திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ் ப்பாணம் அறிவுத் திருக்கோவி லில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுக வுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81, பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தி லுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப் பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச் சினை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் என்.ஜெயகிருஷ்ணன் வழங்குவார். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினால் உதவிப்பொருட்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினால் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ஒரு தொகுதி பாய், படுக்கை விரிப்புகள் மற்றும் நுளம்பு வலைகள் என்பன யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் கையளிக்கப்பட்டன.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் தேவைப்பாடுகளை மேலும் சாதகமாக பரி சீலித்து வழங்குவதாகவும் ஏனைய ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் வர்த்தக சங்க பிரதிநிதிகளால் அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)

# கிடா பிடித்தகுளம் மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

(நெளுக்குளம்)

அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மாந்தை கிழக்கு வட்டாரத்தின் கிடாபிடித்தகுளம் மக்களுக்கு மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சிவஞானசுந்தரம் நிக்சனின் பங்களிப்பின் மூலம் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (8-299)

# டெங்கு பரவும் சூழல் 3 இலட்சம் ரூபா தண்டம்!

(கரணவாய்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பருத்தித்துறை நகரசபை, அல்வாய் மற்றும் பொலிகண்டி பிரதேசங்களில் கடந்த வாரம் டெங்கு கட்டுப்பாட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நுளம்பு பெருகக்கூடியவாறான சூழலினை வைத்திருந்த பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட 19 குடியிருப்பாளர்களிற்கும் அல்வாய் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 9 குடியிருப்பாளரிற்கும் பொலிகண்டி பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் இரு குடியிருப்பாளரிற்கும் எதிராக நேற்றைய தினம் நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகரான ப. தினேஷ், அல்வாய் பொதுச்சுகாதார பரிசோதகர் [illegible] சகன் மற்றும் பொலிகண்டி பொதுச்சுகாதார பரிசோதகர் ம. நந்தகுமார் ஆகியோரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்றையதினமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது குற்றஞ் சாட்டப்பட்ட அனைத்து ஆதன உரிமையாளர்களும் தம் மீதானகுற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆதன உரிமையாளர்களிற்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 3 இலட்சம் ரூபா தண்டப்பணம் மன்றினால் அறவிடப்பட்டுள்ளது. (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமையுடனும் உறுதியுடனும் ஒன்றாக மீண்டெழுவோம்

## இலங்கை உளநல வைத்தியர்கள் சங்கம் ஆலோசனை

(கொழும்பு)

மனதை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதன் மூலம், பேரிடர்களை வென்று முன்னேறலாம் என இலங்கை உளநல வைத்தியர்கள் சங்கம் தெரிவித்து ள்ளது.

பேரனர்த்தங்களுக்கு பின்னர் மனதை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்கு உதவும் விடயங்கள் மற்றும் தவிர்க்க வேண்டி யவை பற்றி இலங்கை உள வைத்தியர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை உள வைத்தியர்கள் சங்கம் வெளியிட் டுள்ள அறிக்கையில்,

வரலாறு முழுவதும், பல்வேறு பேரிடர்களை எதிர்கொண்டு நாம் ஒரு வலிமையான தேசமாக உருவெடுத்துள்ளோம். கடந்த சில தசாப்தங்களாக நாம் சுனாமி, நீண்ட கால உள்நாட்டு யுத்தம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி போன்ற பல இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பேரிடர்களை எதிர் கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் மீண்டெழுந்து ஒருவருக்கொருவர் ஆதரவளித்து, நமது தேசத்தை வலுவாக மீண்டும் கட்டியெழுப்பினோம். ஒருவருக்கொருவர் உதவுதல், தேவைப்படுபவர்களுக்கு செவிசாய்ப்பதன் மூலமும், இன்றைய நெருக்கடியையும் நமது வளர்ச்சிக்கான வாய்ப் பாக மாற்ற முனைவோம். பாதுகாப்பான வீடுகள் மற்றும் வீதிகளை மட்டுமல்ல, வலுவான, புரிந்துணர்வுடைய நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக இதைப் பயன்படுத்துவோம்.

பேரிடர்களுக்கு பின்னர் நீங்கள் மன அழுத்தம், கவலை, கோபம், பயம், பதற்றம், குழப்பம் போன்ற உணர்வுகளை அனுபவிப்பது முற்றிலும் இயல்பானது. உங்கள் மனதை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதன் மூலம், நீங்கள் பேரிடர் தாக்கங்களை வென்று முன்னேறலாம்.

உங்கள் பலங்கள் மற்றும் சிறிய நிர்வகிக்கக் கூடிய விடயங்களில் கவனம் செலுத்துவதுடன் மற்றவருடன் தொடர்பில் இருங்கள்.

சிறுவர்களின் அன்றாட செயற்பாடுகளை முடிந்தவரை இயல்பாக வைத்திருப்பது முக்கியம். அத்துடன் ஆன்மிக மற்றும் கலாசார நடைமுறைகள் நன்மை பயக்கும். நீங்கள் ஒரு நீண்ட கால நோய் ஒன்றுக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தால், அதற்கான தினசரி மருந்துகளை தொடர்ந்து தவறாமல் எடுத்துக் கொள்ளுங்கள்.

அதிகமாக துயரமளிக்கும் செய்திகளைப் பார்ப்பது அல்லது கேட்பது பயத்தை அதி கரிக்கும். அதிகாரபூர்வமான அரசு மற்றும் சரிபார்க்கப்பட்ட செய்தி ஆதாரங்களை மட்டுமே நம்புங்கள்

தகவல்களைப் பகிரும் போது பொறுப்பாக இருப்பதுடன் மது மற்றும் போதைப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.

எந்தவொரு பேரனர்த் தத்திலும், மன அழுத்தம், தூக்கமின்மை, பதற்றம், அமைதியின்மை மற்றும் துன்பகரமான உணர்ச்சிகளை யார் வேண்டுமானாலும் அனுபவிக்கலாம்.

அத்தகைய நேரங்களில் உதவியை நாட தயங்காதீர்கள். ஒருவர் உதவியை நாடுவது என்பது பலவீனத்தில் அல்ல. மாறாக அவரிலுள்ள பலத்தின் அடையாளம். தேசிய மனநல உதவி எண் 1926 இற்கு தொலைபேசியில் அழைப்பை மேற்கொள்வதன் மூலம் வாரத்தில் 7 நாட்களும் 24 மணி நேர இலவச ஆலோ சனை மற்றும் ஆதரவைப் பெறலாம். அத்துடன் நாட்டில் உள்ள எந்தவொரு வைத்தியசாலை மூலமாகவும் உங்களுக்கான மனநல சேவைகளைப் பெறலாம்.

இந்த கடினமான நேரத் தில், பேரனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட ஒவ்வொரு தனி நபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களை ஆதரிப்பதில் இலங்கை உளவைத்தியர்கள் சங்கமாக, நாம் உறுதியாக இருக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 2025 பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சையை ஜனவரியில் நடத்த தீர்மானம்

(கொழும்பு)

2025 பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சையை நடத்துதல் தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே கூறியுள்ளதாவது,

தற்போது தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்காக நடத்தப்படவிருந்த 2025 பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இப்போது இப் பரீட்சையை எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இடர் நிலைமைக்கு உட்பட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாதிருப்பின் தமது பாடசாலை அதிபருக்கு அறிவிக்க வேண்டும்.

அதிபர்கள் தமது பாடசாலைப் பரீட்சார்த்திகள் இடர் நிலைமைக்கு உட்பட்டிருப்பின் அது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர், பரீட்சை ஆணையாளர் (பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு) ஆகியோருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# மதுபானத்தின் விலைகள் அதிகரிக்க வாய்ப்பு

## மதுபான உரிமதாரர்கள் சங்கம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் மதுபானத்தின் விலைகள் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக இலங்கை மதுபான உரிமதாரர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அனைத்து மதுபான உரிமக் கட்டணங்களும் 100 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து அந்த சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

முன்னதாக அனைத்து மதுபான உரிமக் கட்டணங்களும் 100 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியது.

மேலும் வருடாந்திர கலால் வரி, பாதுகாப்பு வைப்புத் தொகை மற்றும் தொழில்துறை அனுகலுக்கான ஒரு முறை கட்டணம் ஆகியவை அதற்கேற்ப அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# பேரிடருக்கு காடழிப்பும் காரணம் விஞ்ஞானிகள் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் இலங்கை, இந்தோனேசியா, மலேசியா மற்றும் தாய்லாந்தைப் பேரழிவிற்குட்படுத்திய கொடிய புயல்கள் மற்றும் கடல் வெப்பநிலை அதிகரிப்பால் மிகவும் பாதிப்புகள் ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காடழிப்பும் இந்த மோசமான நிலைக்குக் காரணம் என்று விஞ்ஞானிகளால் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலாக்கா நீரிணையில் உருவான வெப்பமண்டல சூறாவளியான சென்யார் தென்கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதிகளைப் பேரழிவிற்கு உட்படுத்தியது.

இந்தோனேசிய தீவான சுமத்ராவில் 969 பேர் உட்பட கிட்டத்தட்ட 1,200 பேர் உயிரிழந்தனர். அங்கு சேதங்களை சீர் செய்ய குறைந்தது 3 பில்லியன் டொலர் நிவாரண நிதி தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் இலங்கையும் அதிகளவில் பாதிக்கப்பட்டது. இலங்கையில் இறப்பு எண்ணிக்கை 600 ஐ தாண்டி யுள்ளது. அத்துடன் பொருளாதார இழப்புகள் சுமார் 7 பில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக வானிலை பண் புக்கூறு ஆராய்ச்சியாளர்களின் அறிக்கையின்படி, மிகவும் தீவிரமான ஐந்து நாட்கள் மழைபொழிவின் போது, வட இந்தியப் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை 1991 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டுக்கான சராசரியை விட 0.2 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தால் புயல்களுக்கு ஏற்படும் பங்களிப்பை ஆராய்ச்சியாளர்களால் துல்லியமாக தீர்மானிக்க முடியவில்லை என்றாலும், உலகளாவிய வெப்ப நிலை உயர்வுடன் தொடர்புடைய தீவிர மழைப்பொழிவின் அதி கரிப்பு மலாக்கா நீரிணையில் 9 முதல் 50 வீதமாகவும் இலங்கையில் 28 முதல் 160 வீதமாகவும் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (நி)

# பாதிக்கப்பட்ட இலங்கைக்கு வத்திக்கான் ஆதரவளிக்கும்

(வத்திக்கான்)



டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு வத்திக்கான் ஆதரவளிக்குமென, பாப்பரசர் பதினான்காம் லியோ உறுதியளித்துள்ளதாக கொழும்பிலுள்ள வத்திக்கான் தூதரகத்தின் பொறுப்பாளர் மொன்சிஞ்ஞோர் றொபேர்டோ லூச்சினி அடிகளார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமது துக்கத்தை வெளிப்படுத்துமாறும், கடினமான இத்தருணத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாகவும் போப் ஆண்டவர் லியோ தமக்குத் தெரிவித்ததாக அடிகளார் லூச்சினி தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில், நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் செயற்படுமாறு போப் ஆண்டவர் இலங்கை மக்களைக் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)


சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



Best Wishes

யா/மகாஜனக் கல்லூரியில் இரசாயனவியல் பாட ஆசிரியராக 20.01.2014 - 12.12.2025 வரை கடமையாற்றி பணியிலிருந்து ஓய்வுபெற்ற

திருமதி. மல்லிகா ரவீந்திரன்

(Bsc,PGDE,SLTS-I)

அவரது பணி நயந்து பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்

சேவைக்காலம்

- யா/இப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் 01.09.1998 - 29.05.2000
- யா/யூனியன் கல்லூரி 30.05.2000 -19.01.2014
- யா/மகாஜனக் கல்லூரி 20.01.2014 - 12.12.2025

வாழ்த்துவோர்...
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ மகாஜனக் கல்லூரி

(C-4553)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## எல்லை மோதலுக்கு மத்தியில்
### தாய்லாந்தின் பாராளுமன்றம் கலைப்பு



(கம்போடியா)

கம்போடியாவுடனான எல்லையில் சுமார் ஒரு வாரமாக நீடித்த புதிய மோதல்களுக்குப் பின்னர், தாய்லாந்து பாராளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை கலைக்கப்பட்டுள்ளது.

அடுத்த 45 முதல் 60 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் அறிவிக்கப்படும்.

பாராளுமன்றம் கலைப்பு தொடர்பாக தாய்லாந்து பிரதமர் அனுடின் சார்ன்விரகுல் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அரச ஆணையில், மூன்று மாதங்களுக்கு முன்பு பதவியேற்றதி லிருந்து தனது சிறுபான்மை அரசாங்கம் கட்டுப்படுத்த போராடி வரும் பிற சவால்களில், கொடிய எல்லைப் பிரச்சினையையும் மேற்கோள் காட்டினார்.

அதனால், பாராளுமன்றத்தைக் கலைப்பதே பொருத்தமான தீர்வு என்றும், இது மக்களிடம் அரசியல் அதிகாரத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான ஒரு வழியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொழில் அதிபரான அனுடின், 2023 ஒகஸ்ட் முதல் தாய்லாந்தில் பதவியேற்ற மூன்றாவது பிரதமர் ஆவார்.

கடந்த செப்ரெம்பரில் அவர் ஆட்சிக்கு வந்தபோது, 2026 ஜனவரி மாத இறுதிக்குள் பாராளுமன்றத்தை கலைப்பதாகக் கூறினார்.

கடந்த மாதம் தெற்கு தாய்லாந்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தை கையாண்டதற்காக அனுடினும் அவரது பூம் ஜை தாய் கட்சியும் கடுமையாக விமர்சிக்கப்பட்டன.

இந்த அனர்த்தத்தினால் குறைந்தது 176 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், கம்போடியாவுடன் மீண்டும் மோதல் ஏற்பட்டபோது, குறைந்தது 20 பேர் உயிரிழந்தும் இலட்சக் கணக்கானோர் இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை எதிர்கொண்ட அனுடின், இப்போது பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு வழிவகுத்துள்ளார். (நி)

## ரஷ்யாவின் அடு
### நட்பு நாடுகளை உ

(பெர்லின்) ----------

"ரஷ்யாவின் அடுத்த இல
தான். 5 ஆண்டுகளுக்குள் நே
எதிராக இராணுவ பலத்தை
ரஷ்யா தயாராகிவிடும்" என ந
நேட்டோ அமைப்பு தலைவர்
எச்சரித்துள்ளார்.

இது குறித்து மார்க் ரூட் பேசியதாவது: மோதல் நம் வாசலில் உள்ளது. ரஷ்யா ஐரோப்பாவில் மீண்டும் போரை கொண்டு வந்துள்ளது. நாம் தயாராக இருக்க வேண்டும். ரஷ்யாவின் அடுத்த இலக்கு நாங்கள் தான். நமது கூட்டாளிகளில் அதிகமானோர் அமைதியாக மெத்தனமாக இருப்பதாக நான் அஞ்சுகிறேன். இதில் உள்ள அவசரத்தை உணரவில்லை. பலரும் காலம் நம் பக்கம் இருப்பதாக நம்புகின்றனர். 5 ஆண்டுகளுக்குள் நேட்டோவிற்கு எதிராக இராணுவ பலத்தை பயன்படுத்த ரஷ்யா தயாராகிவிடும்.

கடந்த தலைமுறையினர் போல், போரை தடுக்க பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி செலவீனங்களை அதிகரிக்க வேண்டும். ரஷ்யா ஏற்கனவே நமது சமூகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவாக ஐ.நாவில் குரல் கொடுத்த இந்தியா
### பாகிஸ்தான் மீது பாய்ச்சல்



(ஜெனீவா)

ஆப்கானிஸ்தான் மீது சமீபத்தில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தியதற்கு ஐ.நா.பாது காப்பு சபையில் இந்தியா கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. இதுதொடர்பாக இந்தியாவின் தூதர் ஹரிஷ் பேசியதாவது:-

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதலை நடத்தியதால் அப்பாவி பெண்கள், குழந்தைகள் மற்றும் உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவிக்கிறது.

இந்தத் தாக்குதல்கள் ஐ.நா. சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்தை மீறும் செயலாகும். அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு கவனம் செலுத்தி ஐக்கிய நாடுகள் சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்திற்கு முழு மரியாதை அளிக்கப்பட வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களுக்காக எல்லை தாண்டிய போக்குவரத்தை நம்பியிருக்கும் ஆப்கானிஸ்தானுக்கான முக்கிய வழிகளை பாகிஸ்தான் மூடியுள்ளது.

இது வர்த்தகம் மற்றும் போக்குவரத்து பயங்கரவாதம் ஆகும்.

இது போன்ற நடவடிக்கைகள் உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளை மீறுவதாகும்.

மேலும் கடினமான சூழ்நிலைகளில் மீண்டும் கட்டியெழுப்பப் போராடும் ஒரு பலவீனமான நாட்டிற்கு எதிரான வெளிப்படையான அச்சுறுத்தல்கள் மற்றும் போர்ச் செயல்களுக்கு சமமானவை அதுவும் என்று தெரிவித்தார். (நி)

## வெனிசுலா அருகே எண்ணெ
## கைப்பற்றிய அமெரி
### புதிய போருக்கு வித்திடலாம்

வெனிசுலாவையொட்டிய கடல் பகுதியில் எண்ணெய் ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது.

இது, "போதைப் பொருள் பயங்கரவாதத்துக்கு" எதிராக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு நடத்தி வரும் போரின் ஒரு பகுதி என்று கூறப்படுகிறது.

ஏற்கெனவே, போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு எதிரான நடவடிக்கை என்று கூறி கடந்த செப்ரெம்பர் முதல் கரீபியன் கடலில் செல்லும் படகுகள் மீது அமெரிக்கா மேற்கொண்ட 22 தாக்குதல்களில் 87 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.


இந்தச் சூழலில், வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோவுக்கு எதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுத்த இலக்கு என்ன? உஷார்படுத்தும் நேட்டோ

**இலக்கு நாங்கள் நேட்டோவிற்கு ...த பயன்படுத்த ...நட்பு நாடுகளை ...வர் மார்க் ரூட்**



நமது தாத்தா, பாட்டி அல்லது கொள்ளு தாத்தா, பாட்டி அனுபவித்த போரின் அளவிற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். நமது ஆயுதப் படைகள் நம்மை பாதுகாக்க தேவையான அனைத் தையும் கொண்டிருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

நேட்டோ எனப்படும் இராணுவ கூட்டமைப்பில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 32 நாடுகள் உள்ளன. இதில் அமெ ரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட பல நாடு கள் உள்ளன. மொத்த முள்ள 32 நாடுகளில் 30 நாடுகள் ஐரோப்பா கண்டத்தில் உள்ளது.

ஏற்கனவே உக்ரைன் மீது ரஷ்யா போர் நடத்தி வருகிறது. இந்த சூழலில், நட்பு நாடுகளை நேட்டோ அமைப்பு தலைவர் மார்க் ரூட் எச்சரித்துள்ளார். (நி)

## மியான்மர் மருத்துவமனை மீது தாக்குதல்

### 34 பேர் உயிரிழப்பு



மியான்மரில் இராணுவத்துக்கும், கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் தீவிர மடைந்து வருகிறது.

இந்நிலையில், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ரகைன் மாகாணத்தின் மிராக்-யூ நகரில் உள்ள அரசு பொது மருத்துவமனையை குறி வைத்து ஆளும் மியான்மர் இராணுவத்தின் போர் விமானம் வான்வழி தாக்குதல் நடத்தியது.

மருத்துவமனை மீது நடத்திய தாக்குதலில் 34 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 80இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மருத்துவமனையின் கட்டடங்கள், வாகனங்கள் கடும் சேதமடைந்தன.

மருத்துவமனை மீதான தாக்குதல் மனித உரிமை மீறல் என ஐ.நா. மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். (நி)

# ...ணெய் கப்பலை ...ரிக்கப் படை

## ...ம் என அச்சம்

அழுத்தத்தை அதிகரிக்கும் வகையில், இராணுவத்துடன் தொடர்பில்லாத ஒரு சரக்குக் கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து செய்தியாளர்களிடம் ட்ரம்ப் கூறியதாவது:

"வெனிசுலா கடற்கரை அருகே மிகப்பெரிய ஒரு எண் ணெய்க் கப்பலைக் கைப்பற்றினோம்.

அது, இதுவரை கைப் பற்றப்பட்டதிலேயே மிகப் பெரிய எண்ணெய்க் கப்பல். மிகவும் நல்ல காரணத்துக்காகத்தான் அதைக் கைப்பற்றியுள்ளோம்.

அந்தக் கப்பலில் உள்ள எண்ணெய்யை நாங்களே வைத்துக்கொள்வோம் என்று நினைக்கிறேன் என்றார் அவர்."

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை "கடல் கொள்ளை" என்று வெனிசுலா அரசு கடுமையாக விமர்சித்துள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்காவின் இந்தச் செயல் வெளிப்படையான திருட்டு. சர்வதேச கடல் கொள்ளை. வெனிசுலா மீதான நீண்ட கால அமெரிக்க ஆக்கிரமிப்பின் உண்மையான காரணம் இப்போது தெரிகிறது.

எங்கள் இயற்கை வளங்கள், எண்ணெய், எரிசக்தியைக் களவாடுவதே அமெரிக்காவின் நோக்கம். ஆனால் அவை வெனிசுலா மக்களுக்கு மட்டுமே உரியவை" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


"ஸ்கிப்பர்" என்ற அந்தக் கப்பல் டிசம்பர் 2ஆம் திகதி வெனிசுலாவில் இருந்து 20 இலட்சம் பெரல் கச்சா எண்ணெய்யுடன் புறப்பட்டது. இதில் பாதி கியூபா அரசுக்குச் சொந்தமான எண்ணெய் இறக்குமதி நிறுவனத்துக்கு உரியது என்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் எம்ஃடி அடிசா என்று அழைக்கப்பட்ட ஸ்கிப்பர் கப்பல் 2022இல் ஈரான் புரட்சிகர காவல்படை, லெபனானின் ஹிஸ்புல்லா படையினருக்கு ஆதரவாக சட்டவிரோத எண்ணெய் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறி அதற்கு அமெரிக்கா தடைவிதித்தது.

வெனிசுலா உலகின் மிகப்பெரிய எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ளது.

அங்கு நாளொன்றுக்கு 10 இலட்சம் பெரல் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்கிறது. அரசு எண்ணெய் நிறுவனமான பிடிவிஎஸ்ஏ நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும் பாக செயற்படுகிறது

இந்தச் சூழலில், வெனிசுலாவில் இருந்து எண்ணெய் ஏற்றி வந்த கப்பலை அமெரிக்கா கைப்பற்றியுள்ளது, புதிய போருக்கு வித்திடலாம் என்று சில அமெரிக்க எம்.பி.க்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (நி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்தில் சிக்கிய முன்னாள் சபாநாயகர் கைது



(கொழும்பு)

முன்னாள் சபாநாயகரும், பாராளு மன்ற உறுப்பினருமான அசோக ரன்வல பயணித்த ஜீப் வண்டி, கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் இவ் விபத்துடன் தொடர்புபட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் ஜீப் வண்டியில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1995 - இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி-பா-. 29<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Dip in Engineer, Cashier (France)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16303 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்- பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HND IT, Software Developer<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/16301 |
| பிறப்பு:1987 - இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>4இல்சூரிசெவ்<br>கி-பா- 30 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-A/L,Photo Grapher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16306 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்-மகம்<br>7இல்செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBM, Bank Staff<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/16302 |
| பிறப்பு:1997 - இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>உயரம்:6'3"<br>தகைமை/தொழில்-MSc, System Analyst<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16307 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்-சுவாதி<br>8இல்செவ்<br>கி.பா -40<br>உயரம்-5'2"<br>தகைமை/தொழில்:பட்டதாரி.ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16304 |
| பிறப்பு: 1980 - இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி-பா- 19<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்- O/L, சுவிஸ்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16308 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா - 0<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் - Accountant<br>எதிர்பார்ப்பு: Only London. விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/16305 |
| பிறப்பு: 1993 - இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி-பா-36 1/2<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்: Degree, Associate Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16310 | பிறப்பு-1998 - இந்து<br>நட்சத்திரம்-உத்தராடம்<br>7இல்செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு - வெளிநாடு<br>தொ.இ: G/16309 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 499



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பரதன் தொடங்கிய பழக்கம்!

ஒரு சாலை ஓரமாக ஒருவர் பந்தல் போட்டுக்கொண்டிருந்தார்.

"எதற்கு சார் பந்தல் போடுகிறீர்கள்?" என்று கேட்டார். "சாகும் வரை உண்ணாவிரதம்! இருக்கப் போகிறேன்" என்றார் ரொம்ப அலட்சியமாக. கேட்பவர்களும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் அவர் பாட்டுக்குப் போய் விட்டார்.

இதைப்பற்றி ஒரு பெரியவரிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

"என்ன சார் இது இந்த பழக்கம் இவ்வளவு சர்வ சாதாரணமாகப் போய் விட்டதே!" என்றேன். இந்தப் பழக்கத்தை ஆரம்பித்து வைத்தது யார் தெரியுமா? உங்களுக்கு என்றார்.

"யார்?" என்று கேட்டேன். பரதன் தான் இதை ஆரம்பித்து வைத்தவன்! என்றார் . "யார் இராமாயணத்திலே வருகின்ற பரதனா? என்று கேட்டேன்". "ஆமாம்!" என்று சொல்லி அவர் ஆரம்பித்தார். அவர் வான்மீகி இராமாயணம் படித்தவர். காட்டிலே போய்க்கொண்டிருந்த இராமனைப் போய் பரதன் பார்க்கிறான்.

"அண்ணா நீங்கள் அயோத்திக்குத் திரும்பி வரவேண்டும். அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

ஆனால் இராமர் பிதுர் வாக்கிய பரிபாலனம் செய்துவிட்டுத்தான் திரும்புவேன் என்று பிடிவாதமாக இருக்கிறார்.

"நீங்கள் திரும்பி வரவில்லை என்றால் நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்!" என்கிறார் பரதன். இப்படி சொன்னதோடு இல்லை. இராமனின் பர்ணசாலைக்கு எதிரிலேயே ஒரு தர்ப்பைப் பாயை விரித்து அதிலே உட்கார்ந்து விடுகிறான்.

இதைப் பார்த்த இராமன் "பரதா நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்? ஏன் எனக்கு முன்னாடி உண்ணாவிரதம் இருப்பேன் என்று சொல்கிறாய். அரசர்கள் இப்படி செய்வது தவறு அதனாலே உடனே எழுந்திரு. அயோத்திக்குத் திரும்பி போ!" என்கிறார்.

ஆனால் பரதன் உட்கார்ந்த இடத்திலே இருந்தே சுற்றி நிற்கின்றவர்களைப் பார்த்து "என் அண்ணனுக்கு எடுத்துச் சொல்லக்கூடாதா?" என்கிறான்.

அதற்கு அவர்கள், "நீ சொல்வதும் சரியாகத்தான் தோன்றுகிறது இராமன் சொல்வதும் சரியாகத்தான் தோன்றுகிறது நாங்கள் என்ன செய்வோம்!" என்கிறார் கள்.

சரியான ஜனங்கள் இந்த காலத்திலே உள்ளவர்கள் மாதிரியே! உடனே இராமன், "பரதா இவர்கள் சொல்வதைக் கேட்டாய் இல்லையா. அதனாலே உடனே எழுந்திரு!" என்கிறான்.

பரதன் எழுந்திருக்கிறான். சொல்கிறான். "அரசு வேண்டும் என்று நான் அப்பாவையும் கேட்கவில்லை. அம்மாவையும் கேட்கவில்லை. "பிதுர்வாக்கிய பரிபாலனம்" செய்துதான் ஆக வேண்டும் என்றால் உங்களுக்குப் பதிலாக நான் வனவாசம் போகிறேன். நீங்கள் அரசாள வேண்டும்!" என்கிறான்.

இதற்கு இராமன் சொல்கிற பதில் என்ன தெரியுமா?

"ஒரு காரியத்தை செய்வதற்கு நமக்கே சாமர்த்தியம் இருக்கும்போது அதற்குப் போய் பிரதிநிதி வைத்துக் கொண்டால் உலகம் தூற்றும்" என்கிறார். இது இன்றைக்கு எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு முக்கியமான கருத்து. இன்றைக்கு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

நம்மால் முடியக் கூடிய காரியங்களுக்கெல்லாம் நாம் பிரதிநிதிகளை அனுப்பிக்கொண்டிருக்கிறோம்! அப்படி அனுப்புவதை ஒரு கௌரவமாக வேறு நினைக்கிறோம். அந்தக் காலத்திலே இப்படி செய்தால் உலகம் தூற்றும் என்பது இராமனுடைய கூற்றுலேயிருந்து தெரிகிறது! இன்னொரு விடயத்தையும் நாம் இந்தச் சம்பவத்திலேயிருந்து புரிந்துகொள்ள வேண்டும். ஒரு தருமமான காரியத்தை செய்யும் போது அதற்கு எத்தனையோ இடைஞ்சல்கள் வரலாம்.

பலபேர் ஆசை வார்த்தைகள் எல்லாம் சொல்லுவார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நாமும் இராமனைப் போல திடமாக இருக்க வேண்டும். என்பதுதான், இதிலேயிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கிய விடயம்.

அண்ணன்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பரதன் நினைத்தது மாதிரி இந்தக் காலத்திலேயும் சில தம்பிகள் உண்டு.

அன்றைக்கு ஒரு பையனைப் பார்த்தேன். அவன் சொன்னான்.

"சார்... எங்கள் தகப்பனார் இறந்த பிறகு எங்கள் குடும்பப் பொறுப்பு முழுவதும் எங்கள் அண்ணனிடமே இருக்கட்டும் என்று மனப்பூர்வமாக நான் சொல்லிவிட்டேன். எனக்கு எந்த பங்கும் வேண்டாம் என்றும் சொல்லி விட்டேன்!"

"உங்கள் அப்பா சாகும்போது உங்களுக்கு என்று விட்டுவிட்டுப் போனது எவ்வளவு இருக்கும்?" என்றேன். "சுமாரா 50 ஆயிரம் இருக்கும்!" என்றான். "என்ன பணமா?" என்றேன். "இல்லை! கடன்!" என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலத்தால் பயணிப்பவர்களின் கவனத்திற்கு!



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் சிறிய வெடிப்பொன்று ஏற்பட்டுள்ளது.

எனவே, குறித்த பாலத்தால் பயணிப்பவர்கள் அவதானமாகப் பயணிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-299)

# சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு "மறுமலர்ச்சி நகரம்" எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தில் நகர சபையினுடைய தவிசாளர் ஸ்ரீ பிரகாஷ் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு, கர்ப்பிணிப் பெண்களுக்கான சத்துணவு வழங்கல், நகரசபை எல்லைக்குட்பட்ட தேவையுடையவர்களுக்கான பெறுமதியான உலர் உணவு, முதியோர்களுக்கான உதவித் திட்டம், முன்பள்ளிகளுக்கான உதவித்திட்டம் மற்றும் நகரசபையில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு ஆகியன நகரசபையினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

## 'ஜீத்திதக்கோ ஆர் கப்போ' திரைப்படம் இன்று காட்சிப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

வங்காளத் திரைப்பட மேதை றித்விக் கடக்கின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட "ஜீத்தி தக்கோ ஆர் கப்போ" திரைப்படம், இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள "எங்கட புத்தகங்கள் இல்லத்தில்" காட்சிப்படுத்தப்படும். இந்த இலவசக் காட்சியை, யாழ்ப்பாணத் திரைப் படக்கழகம் ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 1000 | 600 | 600 | 700 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 500 | 600 | 950. |
| தக்காளி | 450 | 380 | 350 | 400 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 150-200 | 200 | 150 | 120 |
| கோவா | 250 | 250 | 350 | 400 | 150 |
| கரட் | 400 | 350 | 350 | 450 | 250 |
| பூசணி | 140 | 120 | 150 | 150 | 120 |
| புடோல் | 260 | 450 | 350 | 400 | 400 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 200 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-350 | 250 | 500 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 280 | 300 | 200 |
| பாகற்காய் | 800 | 1400 | 1500 | 2000 | 1400 |
| வெண்டக்காய் | 300 | 400 | 300 | 500 | 350 |
| கருணைக்கிழங்கு | 280 | 300 | 250 | 400 | 250 |
| பயற்றங்காய் | 1200 | 800 | 1000 | 1200 | 900 |
| லீக்ஸ் | 400 | 350 | 300 | 400 | 300 |
| பீற்றூட் | 300 | 400 | 450 | 450 | 400 |
| கறிமிளகாய் | 1400 | 850 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 1600 | -- | 2000 | -- | -- |
| போஞ்சி | 800 | 800 | 1000 | 1200 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 600 | 600 | 600 | 500 | -- |
| கீரை - 1 பிடி | 140 | 80-160 | 200 | 200 | 150 |
| தேசிக்காய் | 1500 | 1000 | 250 | 400 | 700 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 100 | 120-180 | 70-150 |
| இராசவள்ளி | 800 | 800 | 500 | 600 | 480 |
| வெங்காயப்பூ | -- | -- | 1000 | 600 | -- |
| முள்ளங்கி | 150 | 300 | 200 | 400 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 70 |
| ஈரப்பலா | 150 | 100-150 | 100 | 150 | 120 |

# இராசிபலன்

13.12.2025
கார்த்திகை 27, சனிக்கிழமை
நவமி முன்னிரவு 8.47 மணி வரை

உத்தரம் முற்பகல்10.24 மணிவரை
சுப நேரம் 3.20-4.50மணிவரை
இராகுகாலம்9.20-10.50 மணிவரை

சந்திராஷ்டமம்- அவிட்டம், சதயம்.

வளவன்

**மேஷம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் கூடும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்** வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மிதுனம்** பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**கடகம்** பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிணக்கொன்று இன்று முடிவுக்கு வரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், ரோக பயமுண்டு.

**விருச்சிகம்** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்** உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**உங்கள் தவறுகளிலிருந்து நீங்களே பாடம் கற்றுக்கொள்ளுங்கள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 932





ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமலிருக்கத் தீர்மானித்தார். அநிருத்தரிடம் அவர், "முதன் மந்திரி! சற்று முன் உங்களை நான் பைத்தியம் என்றேன். பிரமை, பைத்தியம் எல்லாம் எனக்குத்தான் என்று தோன்றுகிறது. இனிமேல் தினந்தோறும் வைத்தியன் என்னை வந்து பார்ப்பது மட்டும் போதாது. மாந்திரீகனையும் அனுப்பி வைக்க வேண்டியதுதான். பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வரும் மந்திரவாதியைப் பிடித்து அனுப்பி வைத்தால் கூடப் பாவமில்லை!" என்று மெல்லிய குரலில் கூறினார்.

அநிருத்தரின் உள்ளத்தில் ஒரு சிறிய துணுக்கம் உண்டாயிற்று. "அந்த மந்திரவாதிகளில் எவனும் சக்கரவர்த்தியை நெருங்காமலிருக்கட்டும்" என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டார். பிறகு, "மன்னர் பெரும! மந்திரவாதி எதற்கு? வேறு மந்திரந்தான் எதற்கு? ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமத்தை விடச் சக்தியுள்ள மந்திரம் வேறு ஒன்றுமில்லை!" என்றார்.

குந்தவைப்பிராட்டி, "அப்பா! என்னை அழைத்து வரச் சொன்னீர்களாமே? பழையாறைக்குப் போக வேண் டும் என்று கூறினீர்களாமே? நாங்கள் எல்லோருமே போகலாமா?" என்றாள். சுந்தர சோழர் அதற்கு மறு மொழி சொல்லாமல் முதன் மந்திரியைப் பார்த்து, "அநிருத்தரே! நான் என் கருத்தை மாற்றிக் கொண்டேன். இந்தப் பெண்கள் எதனாலோ ஒரே உற்சாகமாக இருக்கிறார்கள். வீட்டுக்குப் புதிய மருமகள் வந்தது போலக் களிப்படைந்திருக்கிறார்கள். இச்சமயம் இவர்களைப் பிரிக்க எனக்கு விருப்பமில்லை. தாங்கள் சற்று முன் சொன்னது போல் இவர்கள் எல்லாரும் சில நாள் இங்கேயே தங்கியிருக்கட்டும். செம்பியன் மாதேவி தங்களிடம் மிக்க நம்பிக்கையும் மரியாதையும் உள்ளவர். ஆகையால் தாங்களே நேரில் சென்று அவரை அழைத்துக் கொண்டு வாருங்கள்! தங்கள் சீடனை நாகப்பட்டினத்துக்கு அனுப்புங்கள். பெரிய பழுவேட்டரையரையும் அவருடைய இளைய ராணியையும் உடனே அழைத்து வர ஏற்பாடு செய்யும்படி நானே சின்னப் பழுவேட்டரையருக்குச் சொல்கிறேன்!" என்றார்.


"அப்படியே செய்யலாம், சக்கரவர்த்தி! ஆனால் எல்லாரும் வந்து சேருவதற்குச் சில தினங்கள் பிடிக்கலாம். நேற்று அடித்த புயல் மழை காரணமாக நதிகளில் எல்லாம் பூரணப் பிரவாகம் ஓடிக் கொண்டிருக்கிறது!" என்றார் முதன்மந்திரி.

"அதனால் பாதகம் இல்லை. இத்தனை நாள் பொறுத்த நாம் இன்னும் சில நாள் பொறுத்திருப்பதில் நஷ்டம் ஒன்றுமில்லை. கரிகாலனையும் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்தால் எல்லா விடயங்களையும் முடிவு செய்து விடலாம். அவன் இன்னமும் வருவதற்கு மறுத்தால் நானே புறப்பட்டுப் போக வேண்டியதுதான். அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். நீங்கள் நாளைக்கே சென்று பெரிய பிராட்டியை எப்படியாவது கையோடு அழைத்து வாருங்கள்! போகும்போது புயலினால் கஷ்டத்திற்குள்ளான மக்களைப் பற்றியும் கவனியுங்கள். நம்முடைய குடும்ப விவகாரங்களில் கவனம் செலுத்தி அந்த முக்கியமான காரியத்தை மறந்தே விட்டோம்" என்றார் சக்கரவர்த்தி. தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## சொர்க்கத்தில் நரி



நரி ஒன்று தாகத்தால் தவித்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. என்ன செய்வது ? தண் ணீரைத் தேடி அலைந்தது.

தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதைப் பார்த்தது. கிணற்றின் அருகே சென்றது, கிணற்றில், கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட நரி, வாளியில் தாவி ஏறி அமர்ந்தது. உடனே வாளி 'விரி'ரெனக் கிணற்றின் உள்ளே சென்றது. நரி வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தது. தாகம் [illegible] மேலே பார்த்தது. 'எப்படி வெளி யேறுவது' என்று யோசிக்கத் தொடங்கியது.

'மேலேயிருந்து யாராவது கயிற்றை இழுத்தால்தானே என்னால் மேலே போக முடியும். என்ன செய்வது?' நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம் தோன்றியது.

அந்த நேரம் பார்த்துக் கிணற்றின் அருகே ஓநாய் ஒன்று வந்தது. கிணற்றின் உள்ளே எட்டிப் பார்த்தது.

அங்கு நரி இருப்பதைக் கண்டது. "அட்டா! நரி ஐயா! உள்ளே என்ன செய்கிறீர்கள்?" எனக் கேட்டது.

"நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறேன். என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு மீன், கோழி, ஆடு எல்லாம் தருகிறார்கள்" என்றது நரி

ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறு முனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி 'சரசர'வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போது நரி அமர்ந்திருந்த வாளி மேலே வந்தது.

நரி மேலே வரும் போது பாதி வழியில் ஓநாயைப் பார்த்தது.

"நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்குப் போகிறேன்". என்று கூறிக் கொண்டே மேலே சென்றது. மேலே வந்ததும் கிணற்றுச் சுவரின் மேலே தாவிக் குதித்துத் தப்பி ஓடியது. பாவம் ஓநாய்.!

ஒரு செயலைச் செய்வதற்கு முன் பல முறை யோசிக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான கண்ணோட்டம் மற்றும் தெளிவான மனசாட்சியே சமநிலையான வாழ்வின் பிரதிபலிப்பு. ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கிராம சேவையாளர்களுக்கு எழுதும் ஓர் அவசர மடல்

கிராம சேவையாளர்களுக்கு அன்பு வணக்கம். நாட்டில் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் அது உங்களின் வேலைப்பளுவை அதிகரிக்கும் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

அதேவேளை நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் அரச நிர்வாகத்துக்குமான தொடர்பு என்பது உங்கள் ஊடாகவே நடந்தாகிறது என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை.

அதிலும் இந்த நாட்டின் ஏழை மக்கள் கிராம சேவையாளர்களிடமே தங்களின் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் கூறுகின்றனர்.

அதேநேரம் ஒவ்வொரு கிராம சேவையாளர்களும் தத்தம் பிரிவுக்குட்பட்ட மக்களை நன்கு அறிந்துள்ளனர் – அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் எந்தத் தளம்பலும் தவறுமின்றி சுமுகமாக நடந்தாகும்.

இந்தவகையில் நோக்கும்போது கிராம சேவையாளர் என்ற பதவி நெருக்கீடுமிக்கதாக இருப்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதேசமயம் அலுவலகப் பணிகளை அலுவலகத்தில் வைத்துவிட்டு வீடுகளில் நிம்மதியாக இருக்கவும் முடியாது. எந்நேரமும் பொது மக்கள் தமது கிராம சேவையாளர்களுடன் கலந்துரையாடி தமது நிலைமைகளை எடுத்துக் கூறுவர்.

இதுவும் நெருக்கீட்டை வலுப்படுத்தும் எனும் போது, நீங்கள் ஆற்றுகின்ற பணி மிகவும் கஷ்டமானதும் கடினமானதும் என்பது மறுக்க முடியாத உண்மை.

எதுவாயினும் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள். உங்களின் கள ஆய்வுகள் எந்தளவு தூரம் சரியானதும் உண்மையானதும் என்பதைப் பொறுத்தே பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்துக்கு ஒத்தடம் கொடுக்க முடியும்.

ஆம், உங்களின் நேர்மையான சேவை ஏழை மக்களின் துயரைப் போக்கவல்லது. பாதிக்கப்பட்ட மக்களை மீட்க வல்லது. பாதிக்கப்படாத மக்களுக்கு நிலைமையை எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் மேலான ஒத்துழைப்புகளையும் பெறக்கூடியது.

எனினும் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக வெள்ளப் பாதிப்புக்கு ஆளானவர்கள் பலர் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை கிராம சேவையாளர்கள் கவனிக்கவில்லை. அதைப் பதிவில் சேர்க்கவில்லை எனக் குறைப்படுவது அதிகரித்துள்ளது. இது பற்றி நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

சிலவேளைகளில் சமூகவலைத்தளங்களில் வெளியாகிய செய்திகள் உங்களை சலனப்படுத்தியிருக்கலாம். அல்லது வழங்கப்படுகின்ற நிவாரணத்தை எப்படியும் மட்டுப்படுத்த வேண்டும் என்ற மனநிலையை உங்களிடம் ஏற்படுத்தியிருக்கலாம்.

என்னதான் இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்துகின்ற பாரிய பொறுப்பு உங்களின் கைகளில் உள்ளது.

எனவே யார் என்ன கூறினாலும் உங்களின் மனச்சாட்சியும் சுற்றுநிருபமும் நேரடித் தரிசிப்பும் உங்களின் தீர்ப்பை எழுதுவதாக இருக்கட்டும் என்பதுதான் நம் கோரிக்கை.

அதேவேளை பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்ட செயலர்கள்; உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு, பாதிக்கப்பட்டும் நிவாரணம் கிடைக்காத மக்கள் சந்திப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். அதை ஒருபோதும் தட்டிக்கழித்தலாகாது.

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமற்றது

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்மேலும் கருத்து தெரிவித்த அவர்,

13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களைக் கொடுத்தால் தென்னிலங்கையில் அடிவாங்க வேண்டும். கொடுக்காவிட்டால் வடக்கில் அடிவாங்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

நாங்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையாக இருந்து உண்மையைக் கூற வேண்டும். இந்த நாட்டின் வரலாற்றில் அனைத்துத் தலைவர்களும் தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

தமிழ் மக்கள் காலாசாரத்தில் பின்னிப்பிணைந்தவர்கள்.

இன்று சில தலைவர்கள் வடக்குக்குச் சென்றால் சிங்கள கலாசாரத்தை மறந்து விடுகின்றனர். தமிழ் - சிங்கள கலாசாரங்களில் பெரிய வேறுபாடுகள் இல்லை. கதிர்காமம் மற்றும் சிவனொளிபாதமலையில் இரு இனங்களும் ஒன்றாக இணைய முடியும் என்றால் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வைத் தேடிச் செல்லலாம்.

வடக்கில் அனைத்து அபிவிருத்தியும் மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் உருவாகியதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின்தேசியத் தலைவர் பிரபாகரனோ அல்லது ஏனைய தலைவர்களோ உருவாக்கியதல்ல.

தென் பகுதியில் இருக்கும் இளைஞர்களுக்குக் கிடைக்கும் அதிகாரங்கள் வடக்குக்கும் வழங்க வேண்டும்.

வடக்கில் அரசியல் ரீதியாக தனி நாடு தேவை போன்ற கோரிக்கைகள் இருக்கிறது. அதற்கு எமது ஆட்சியில் தீர்வுகள் உண்டு எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஊழல் மோசடிகள் இன்மையால் சர்வதேச உதவிகள் தாராளம்

### ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் ஊழல், மோசடி இடம்பெறாது எனச் சர்வதேச சமூகம் நம்புகின்றது.

அதனால்தான் சர்வதேச உதவிகள் அதிகளவு கிடைக்கப் பெறுகின்றன என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை அரசு மீது சர்வதேசம் நம்பிக்கை வைத்துள்ளது. இந்த ஆட்சியின் கீழ் ஊழல், மோசடிகள் இடம்பெறாது என்பதாலேயே அதிகளவு சர்வதேச உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன.

இந்த ஆட்சியின் கீழ் சர்வதேச உதவிகள் கிடைக்கப்பெறமாட்டாது எனச் சிலர் கூறி வந்தாலும் அது பொய் என்பது உறுதியாகியுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களும் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

நாட்டு மக்களும் தம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். இவர்களுக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டு வருவதற்கு அரசு உதவிகளை வழங்கும். மக்களுக்கு அரசால் வழங்கப்பட்ட அனைத்து நிவாரண உறுதிமொழிகளும் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றார். (ம-7)

## திருகோணமலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை - சலப்பையாறு பகுதியில் வீதியோரத்தில் வயோதிபப் பெண்ணொருவரின் சடலமொன்று நேற்று (12) மீட்கப்பட்டுள்ளது.

இதில் குச்சவெளி சலப்பையாறு பகுதியை சேர்ந்த விஜயகுமாரி செல்வராஜா (வயது - 56) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பக்கத்து வீட்டுக்கு சென்று காணாத நிலையில் கணவர் தேடிச் சென்ற போது வீதியோரத்தில் குளிர் காரணமாக போத்திச் சென்ற பெட்சீட் வீதியோரத்தில் இருந்ததாகவும் சற்றுத் தூரத்தில் அவர் வீசி எறியப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. (ம-7)

## இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது

(கொழும்பு)

5 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாகக் கோரிய பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோர் இலஞ்சக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தனகடவலப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய, தியபெதும பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களே நேற்று முன்தினம் (11) காலை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளர் தனது மோட்டார் சைக்கிளில் கடந்த 9 ஆம் திகதி பயணித்துக்கொண்டிருந்த போது, குறித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் இன்றி மது போதையில் வாகனம் செலுத்தியமை அதிகாரிகளுக்குத் தெரியவந்துள்ளது.

எனினும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காமல் முறைப்பாட்டாளரின் மோட்டார் சைக்கிளின் காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் காலாவதியான வாகன வருமான உத்தரவுப் பத்திரம் என்பவற்றை சந்தேக நபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தம் வசம் எடுத்துள்ளனர்.

அந்த இரண்டு ஆவணங்களையும் திருப்பி வழங்குவதற்காக 5 ஆயிரம் ரூபா பணத்தை அவர்கள் இலஞ்சமாகக் கோரியுள்ளனர்.

அதற்கமைய குறித்த இரண்டு அதிகாரிகளும் நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் தியபெதும வாராந்த சந்தைக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

16

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்கா

சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் ஓர் அரசியல்வாதியாவார். இவர் இலங்கையின் பிரதம மந்திரியாக மூன்று முறை, 1960-1965, 1970-1977 மற்றும் 1994-2000 ஆகிய காலப் பகுதிகளில் பதவியில் இருந்தவர். இவரே உலகிலேயே முதலாவது பெண் பிரதமருமாவார். இரு தடவைகள் (1965-70, 1989-1994) எதிர்க்கட்சித் தலைவராகவும், அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் விளங்கினார். தனது கணவரின் அரசியல் சித்தாந்தங்களையும், குறிக்கோள்களையும் சாதிப்பதில் முக்கியமான பங்கொன்றையும் ஆற் றினார்.

தனது கணவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொல்லப்பட்டபின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். ஜூலை 21, 1960 இல் முதன் முறையாக பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1965 இல் நடந்த பொதுத்தேர்தலில் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1970 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கட்சியை வழி நடாத்தினார். 1970 பொதுத்தேர்தலில் இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து பெரும் வெற்றி பெற்று இரண்டாம் முறை மீண்டும் பிரதமரானார். 1977 இல் நடந்த தேர்தலில் கட்சி படுதோல்வி அடைந்தது. 1980 இல் அன்றைய ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியினால் ஊழல் குற்றச்சாட்டுகளில் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு குடியுரிமை பறிக்கப்பட்டு ஏழு வருடங்களுக்கு அரச பதவிகளை ஏற்கத் தடை செய்யப்பட்டார்.

### சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் -1964

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் என்பது, இலங்கையில் நாடற்றவர்களாக இருந்த 975,000 இந்திய வம்சாவளித் தமிழர்களின் எதிர்காலம் தொடர்பாக, அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும், இந்தியப் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் 1964 ஆம் ஆண்டில் அக்டோபர் 30 இல் கையெழுத்தான ஒப்பந்தத்தைக் குறிக்கும். இந்த ஒப்பந்தத்தின்படி மேற் குறிப்பிட்டவர்களில் 525,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதெனவும், 300,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதெனவும் முடிவானது. மீதி 150,000 பேர் விடுபட்டுப் போயினர். 1967 முதல் அமுலாகத் தொடங்கிய இந்த ஒப்பந்தம் அம் மக்களை இந்தியக் குடியுரிமை பெறுவோர், இலங்கை குடியுரிமை பெறுவோர், நாடற்றவர்கள் என மூன்று கூறாகப் பிரித்தது.

### இலங்கை குடியரசாதல்

1970 முதல் 1977 வரையான காலம் சிறிமாவின் ஆட்சியில் முக்கியமான ஒரு பகுதி. 1972 இல் இலங்கையின் வரலாறானது புதிய கோணத்தில் நகர ஆரம்பித்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த போதிலும் கூட இலங்கையின் அரசாட்சியின் மன்னராக பிரித்தானிய அரசரே பதவி வகித்தார். இதில் இருந்து இலங்கையை மீட்டு, பூரண இறையாண்மை மிக்க ஒரு நாடாக இலங்கையை மாற்றியது சிறிமாவின் ஆட்சியே. (அதாவது இலங்கையின் ஆட்சியில் எந்த ஒரு வெளிநாட்டினதும் தாக்கம் இல்லாது முழுமையாக மக்கள் ஆட்சியாக மாற்றி இலங்கை குடியரசு ஆக்கப்பட்டது என்பதால் குறிப்பிடப்பட்டது). அதுவரை சிலோன் என்று அறியப்பட்ட நம்நாடு 1972 முதல் ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசு என்ற புதிய பெயரை பெற்றது.

### ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அணிசேரா நாடுகளின் தலைவராக நியமிக்கப்படல்

1956 இல் இலங்கையின் பிரதமராக இருந்த SWRD பண்டாரநாயக்கா அணிசேரா கொள்கையை பின்பற்றத் தொடங்கினார். இவர் மேற்கத்தேய நாட்டங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு வெளியுறவுக்கொள்கையை உருவாக்க முனைந்தார். இத்தகைய போக்கு அவர் மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடவும் இருந்தது. ஸ்ரீமா அணிசேரா நாடுகளின் மூலம் இலங்கை பல உதவிகளை அடையும் எனவும் வேறு சக்திமிக்க நாடுகளில் இருந்து ஏற்படும் ஆக்கிரமிப்பில் இருந்தும் பாதுகாப்பு கிடைக்கும் என நினைத்தார். அணிசேரா நாடுகளின் அங்கத்துவம் சர்வதேச தலைவர்களுடன் ஒரு இணைப்பை உருவாக்குகின்றது அது இலங்கைக்கு ஒரு பலம் ஆகும்.

1960 இல் பதவியேற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது கொள்கை பிரகடனத்தின் போது பின்வருமாறு குறிப்பிட்டார். "வெளிநாட்டு தொடர்புகளில் எனது அரசாங்கம் வல்லரசுக்கூட்டுக்களை பொறுத்து அணிசேராமையையும், நடுநிலையையும் கடைப்பிடித்து வரும்" என்பதாகும்.

அணிசேரா நாடுகளின் முதல் மாநாடு யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேட் இல் 1961 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதில் 25 நாடுகள் பங்குபற்றின. யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோ, இந்தோனேசியா ஜனாதிபதி சுகாமோ, எகிப்து ஜனாதிபதி காமல் அப்துல் நாசர், கானாவின் முதல் ஜனாதிபதி நிக்ருமா, இந்தியாவின் பிரதமர் நேரு இவர்களது முன்னணியில் இவ்வமைப்பு தோற்றம் பெற்றது. சர்வதேச மட்டத்தில் மேற்கத்தேய மற்றும் கீழைத்தேய நாடுகளில் இடம்பெற்ற பனிப்போரில் நடுநிலைக் கொள்கையில் செல்ல வேண்டும் என்ற கருத்துக்களை கொண்டிருந்தனர்.

யூகோஸ்லாவியா விஜயத்தை முடித்துக்கொண்டு வெளியிட்ட கூட்டு அறிக்கை ஒன்றில், "பாதுகாப்பு பிரச்சினைகள் துரிதமான பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கு அணிசேரா நாடுகளின் ஒன்றிணைந்த நடவடிக்கைகள் அவசியம்" எனக்குறிப்பிட்டார்.

1964 இல் கெய்ரோவில் நடந்த அணிசேரா மாநாட்டில் குடியேற்றவாதம், ஆயுத உற்பத்தியின் பெருக்கம் என்பவற்றை எதிர்க்கும் கருத்துக்களை வலியுறுத்தி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மூன்று பிரேரணைகளை கொண்டு வந்து நிறைவேற்றினார்.

1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் லுசாக்காவில் நடந்த அணிசேரா நாடுகளின் மூன்றாவது மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவ்வமைப்பின் உப தலைவராக நியமிக்கப்பட்டார்.

1973 மே 13ஆம் திகதி அல் ஜீரியாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் நான்காவது மாநாட்டில் இலங்கைப்பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கிச் சென்றிருந்தார். 1971 ஜனவரியில் சிங்கப்பூரில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் பிரதமர்களின் மாநாட்டில் இலங்கைப்பிரதநிதியாகவும் ஸ்ரீமா கலந்து கொண்டார்.

1976 ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி இலங்கையில் 86 நாடுகள் கலந்து கொண்ட அணி சேரா நாடுகளின் ஐந்தாவது மாநாடு ஆரம்பமானது. இம் மாநாட்டின் போது அணி சேரா நாடுகளின் தலைவராக ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா நியமிக்கப்பட்டார். புத்தெழுச்சி பெற்ற ஒரு மகாநாடாக அணிசேரா நாடுகளின் ஏனைய தலைவர்கள் இதனை வர்ணித்தனர். உலகின் முதல் பெண் பிரதமர் என்பதனால் இவரின் மதிப்பு முன்றாவது நாடுகளில் மாத்திரமல்ல மேற்கத்தேய வல்லரசு நாடுகளிலும் அதி சிறப்பாக மேலோங்கிப் பிரகாசித்தது.

உலகின் முதல் பெண் பிரதம அமைச்சரைக் காணவும், அவரோடு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஏனைய உலகத் தலைவர்கள் மத்தியில் பேரார்வம் கூடிநின்றது. எனவே, இவரை நேரில் கண்டுகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் உலகத் தலைவர்கள் பலர் எமது மண்ணில் முதன் முதலாகக் கால்பதித்தனர்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றினுள்...

அனலைதீவில் கிணற்றுக்குள் தவறிவிழுந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அனலைதீவு 5ஆம் வட்டாரத்தில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த சுப்பையா நளினி (வயது-56) என்பவரே உயிரிழந்தவராவார்.

தொடர் மழை காரணமாக நீர் நிறைந்த பாதுகாப்பற்ற கிணற்றில் தவறிவீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## வடக்கில்...

திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேலும் அடுத்த 36 மணித்தியாலங்களில் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## குடும்பஸ்தர்...

முல்லைத்தீவு இரணைப்பாலையில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த அன்ரன் செல்வராசா திலைக்சன் (வயது - 31) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த 9ஆம் திகதி இரணைப்பாலை வீதியில் உந்துருளியில் பயணித்தபோது கனரக வாகனம் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7)

## இலங்கை...

அலுவலர் பிரிவில் வெள்ளநீர் உட்புகுந்த வீட்டிற்கு அரசினால் வழங்கப்படும் 25,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படாமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரியிருந்தது.

இதன்படி பிரதேச செயலகத்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் முறைப்பாட்டாளர் உட்பட்ட 18 வீடுகளுக்கான சேதவிபரம் சிபாரிசு செய்யப்பட்டு அரசாங்க அதிபர் அவர்களுக்கு நிதி ஒதுக்கீட்டுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சமுகமளிக்கும்போது வெள்ளநிவாரணம் தொடர்பான சுற்றுநிருபங்கள் மற்றும் நிதிப்பிரமாணம் என்பவற்றின்படி முறைப்பாட்டாளருக்கான கொடுப்பனவை வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறைப்பாட்டாளர் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோது நேரில் வந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும்படி பிரதேச செயலாளரால் முறைப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (ம-7,33)

## அத்துமீறும்...

முன்பாக கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை தொடர்பில் நேற்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற நிலைமை காரணமாக கடல் கடும் கொந்தளிப்பாகக் காணப்படுவதன் காரணமாகவும் கடற்படையினர் ஆழ்கடலுக்குச் செல்ல முடியாததன் காரணமாகவும் இந்தியக் கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தியத் துணைத்தூதர் சாய் முரளி அல்லது தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் அல்லது மோடி ஆகியோர்தான் இதற்கு ஒரு உரிய தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும்.

இந்தியக் கடற்றொழிலாளர்கள் கட்டுப்பாடின்றி தமது சட்ட விரோதக் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு உரிய தீர்வினை விரைவிலே எடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு மிக விரைவில் இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு முடிவு கட்டவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## பய...

டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

“தற்போதைய அனர்த்த சூழ்நிலையில், மக்கள் செய்யக் கூடிய மிகச் சிறந்த காரியம் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து, பாதுகாப்பான இடங்களில் தங்கியிருப்பதாகும்.” என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ஆபத்துகள் இருந்தபோதிலும், வார இறுதிச் சுற்றுலாக்களுக்குச் செல்வது சாத்தியமா? என்று பொதுமக்கள் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அழைத்து விசாரித்த பல அழைப்புகள் கிடைத்ததாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களாக பதுளை மற்றும் கண்டி மாவட்டங்களின் சில பகுதிகளில் 75 மில்லிமீற்றருக்கு அதிகமான மழைவீழ்ச்சி பதிவானதைத் தொடர்ந்தே இந்தச் சிவப்பு அறிவிப்புகள் நீட்டிக்கப்பட்டன. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 6041
O 2 4 6 1 1 1
அத சம்பத
O 6 1 1 1
சீட்டிழுப்பு இலக்கம் 616
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 157
மேடம் 40 62 67

தன நிதானய
திகதி - 2025.12.12
சீட்டிழுப்பு இலக்கம் - 2071
W 04 27 33 43 W

மெகா பவர்
திகதி 12/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2389
T 07 30 31 42 67

ஜய
திகதி 2025.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 0309
M 2 2 9 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4283
சீட்டிழுப்பு திகதி 12.12.2025
T 12 44 55 69
T

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 1350
விருச்சிகம் 16 47 52 53 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.12.2025 வெற்றி வாரம் 0749
ஆங்கில எழுத்து C மற்றும் வெற்றி இலக்கம் 3 9 2 9 5 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,335,744.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3015
சீட்டிழுப்பு திகதி 2025.12.12 தினம் வெள்ளிக்கிழமை
14 38 39 70 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,908,807.20
DLB

சனிதா
திகதி 12.12.2025 வெற்றி வாரம் 5176
09 12 44 49 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,016,772.40
ரூ. 50,000/- பணப்பரிசு
DLB

சசிரி
845
12.12.2025 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 18 22
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4727
சீட்டிழுப்பு திகதி 12.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
06 18 31 42 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,297,839.60
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 38 12 14 44 74
சீட்டிழுப்பு வாரம் 2191
12.12.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.612,536,181.80
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2841
சீட்டிழுப்பு திகதி : 2025.12.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,481,834.40
ADA KOTIPATHI
10 13 30 59 H
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் விற்பனைக்கு

- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 15 அடி அகலமும் 15 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்
- யாழ்.பிறவுண் வீதியில் 30 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும்
- யாழ்.மனோகராத் தியேட்டருக்கு அண்மையில் 2½ பரப்பில் அமைந்த வடக்கு வாசல் வீடும்
- யாழ்.விக்டோரியா வீதியில் 16 பரப்புக் காணியும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 16பரப்புக் காணியும்

உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

**077 723 2535**

(C-4554)

## துப்பரவுத் தொழிலாளர் தேவை

கோண்டாவிலில் உள்ள கோவில் ஒன்றிற்கு துப்பரவுத் தொழிலாளர் தேவை.

வயது : 25 – 50

**075 759 9546**

(6072)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378, 076 097 3127**

## Voyzant இந்தியா கோவில்கள்

- ஆறுபடை வீடு
- திருப்பதி
- திருநாகேஸ்வரம்
- இராமேஸ்வரம்
- சிதம்பரம்
- ஸ்ரீரங்கம்
- வைத்தீஸ்வரன்
- மேல்மருவத்தூர்
- திருவண்ணாமலை
- மதுரை மீனாட்சி
- திருவெண்ணெய்நல்லூர்
- சங்கரப்பாணி
- திருவானைக்கா
- காஞ்சிகாமாட்சி
- ராமர்கோவில்
- திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்

**189,000/=** (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து — தங்குமிடம்

10 நாட்கள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd

புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

**077 284 9535, 021 222 6866**

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

(C-4492)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நவக்கிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் – புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியுடன்
- செம்மண் தரை, நிலப்பரப்பு, குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நிலாவரைக்கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 10 Km

**076 860 2770, 076 987 8617**

(6152)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரில் இயங்கி வரும் குழந்தைகளுக்கான பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிற்கு

- விற்பனை உதவியாளர்
- Social Media Operator (ஆண்கள்/பெண்கள்) வேலைக்குத் தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (C-4557)

**077 469 6695, 076 176 1986**

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3000/- |
| 11-16 Kg | 2400/- |
| 21-22 Kg | 2380/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4558)

- UK 11Kg - 1400/-
- France 11Kg - 2180/-
- Germany 11Kg - 2030/-
- Swiss 11Kg - 2530/-
- Australia 11Kg - 2180/-
- Italy 11Kg - 2310/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தைமேனியில் 34 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- 18 அடிப் பாதையுடன்
- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- அச்சுவேலி – வசாவிளான் செல்லும் பிரதான காபற் வீதி 300m தூரம்
- அச்சுவேலி பஸ் நிலையம் 1km தூரம்

**077 288 0152, 076 739 0413**

(6152)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக 16 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு செம்மண் தரை
- பலாலி வீதி 100m தூரம்
- பாடசாலை 200m தூரம்
- 18 அடிப் பாதையுடன்

விற்பனைக்குண்டு

**074 029 2338, 076 990 3039**

(6152)

MEGA SALE



MEGA SALE

## யாழ், வீரசிங்கம் மண்டபத்தில்

### நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

### இந்தியன் செலக்ஷனின்

# மெகா சேல்!

- திருமணப் பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- றெடிமேட் சல்வார்கள்
- பார்ட்டி புரொக்
- டொப்
- கவுண்
- ஸ்கேட், ப்ளவுஸ்
- சேட், ரீ சேட்
- பெட்சீற்
- மொடர்ன் ரெஸ்
- வேஷ்டிகள்
- லெகீன்ஸ்
- லெஹங்கா
- சிறுவர்களுக்கான ஆடைகள்

மற்றும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்

(6151)



இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

காலம் : 13-12-2025 முதல் 31-12-2025 வரை

(வாரத்தில் 07 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்)

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

## லைடன் புடவை நிலையம் – யாழ்ப்பாணம்

எதிர்வரும் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் 10% விஷேட விலைக்கழிவு மற்றும் விஷேட விலைத் தள்ளுபடிகளில் உங்களுக்கான ஆடைகளை பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்



- 3 சாறம் (Saram) - 985/=
- 3 சட்டை (Frock) - 2500/=
- 3 சேலை (Saree) - 1000/=
- 1 குளிர் மேலங்கி (Jacket) - 750/=
- 1 சேட் – அரைக்கை (Plain Shirt - S/S) - 1000/=
- 1 சேட் – முழுக்கை (Plain Shirt - L/S) - 1250/=
- 5 ரீசேட் (T.shirt) - 1000/=
- 3 சொக்ஸ் - 300/=
- 1 குழந்தைகளிற்கான சுவிட்டர் - 500/=
- 1 சிறிய சுவிட்டர் - 750/=
- 1 பெரிய சுவிட்டர் - 1000/=
- 3 பிரா (Bra) - 1000/=
- 1 நஷனல் - 1000/=
- 1 பிரின்டட் அரைக்கை சேர்ட் (Printed shirt short sleeve) - 1500/=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே......

Until Stock last...



நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் 14.12.2025 மற்றும் 21.12.2025 ஆகிய இரு ஞாயிற்றுக்கிழமையிலும் எமது வியாபார நிலையம் திறக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**10%**

**Leyden Textile Center**

410, Hospital Road, Jaffna. 021 222 2381

(C-4556)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 200/= | Max 3Kg |
| 1Kg சிவப்புப் பருப்பு | - 240/= | Max 2Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 150/= | Max 5Kg |
| 1Kg றவை | - 286/= | Max 3Kg |
| 1Kg தீட்டல் பச்சை | - 237/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 890/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg சோயா | -360/= | |
| 01 சன் பப்படம் | - 165/= ~~235~~/= | |
| 01 குட்நைட் நுளம்புத்திரி | - 135/= ~~180~~/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= ~~70~~/= | |




வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைக்கு மொத்தக் கொள்வன்வு விநியோகங்களிற்கு எம்மை நாடவும்.

(1798)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 076 572 5757

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.